(ஊ) வேதாரண்யத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியப் பிரதேசத்தில் கொத்தடிமைகளாக இருத்தல் குறித்து.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் இருந்து சுமார் 300 தொழிலாளர்களை, மத்தியப் பிரதேச மாநிலம், ரேவா மாவட்டம், சிறிமூர் என்னுமிடத்தில் கொத்தடிமைகளாக பட்டினி போட்டதில் ஒருவர் இறந்துள்ளதும் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த தொழிலாளர்கள், மத்தியப்பிரதேச மாநிலம், ரேவா மாவட்டம், சிறிமூர் கிராமத்தில் கட்டப்படும் அணைக்கட்டு வேலைக்காக "ரே கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" என்னும் நிறுவனத்தின் கீழ் உயர்ந்த ஊதியம் கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டு, 30—9—1987-க்கு முன்னர் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு அவர்கள் உணவு மற்றும் உறைவிடமின்றி கொத்தடிமைகளாக கஷ்டப்படுவதாகவும் அங்கிருந்து தப்பி வந்த, திரு. ரவிச்சந்திரா என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், தஞ்சாவூரைச் சேர்ந்த காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் காவல் துறைப் பிரிவு ஒன்று தொழிலாளர்களை மீட்டு வருவதற்கென்று 16—10—1987 அன்று மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு அனுப்பப் பட்டது.

2. மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன், சிறிமூர் கிராமத்திலிருந்து 17 குழந்தைகள் உட்பட 221 தொழிலாளர்கள் 25—10—1987 அன்று மீட்கப்பட்டனர். 25—10—1987 அன்று காலை 4-30 மணிக்கு இத்தொழிலாளர்கள், ரயில் மூலம் புறப்பட்டனர். 26—10—1987 அன்று இரவு 10-30 மணிக்கு மெட்பஞ்சரா

1987 நவம்பர் 17] [திரு. எ. அருணாசலம்]

என்னும் ரயில் நிலையத்தில் மின்சாரம் பாய்ந்ததால் தொழிலாளர்கள் பிரயாணம் செய்த இரு ரயில் பெட்டிகளுள் ஒன்று தீப்பற்றியது. எனினும் இவர்கள் அனைவரும் அன்றிரவு 11-30 மணிக்கு நாக்பூர் அடைந்துள்ளனர். அதே இரயில் மூலம் இத்தொழிலாளர்கள் அனைவரும் 30—10—1987 அன்றிரவு 8-30 மணிக்கு சென்னை வந்தடைந்தனர். சென்னையிலிருந்து தொழிலாளர்கள் அனைவரும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் 31—10—1987 அன்றிரவு நாகப்பட்டினத்திற்குக் கொண்டுவரப்பட்டு தத்தம் சொந்த கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

3. இத்தொழிலாளர்களுள், (1) அண்ணாச்சி என்கிற மாரி முத்து, த/பெ. கன்னையன், (2) இராமசாமி, (3) செல்வராஜ் மற்றும் (4) பாண்டியன் என்னும் நால்வர் நோய்வாய்ப்பட்டு உடனடியாக நாகப்பட்டினம் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுள், அண்ணாச்சி என்கிற மாரி முத்து என்பவர் காய்ச்சல், வயிற்றுப்போக்கினால் மற்றும் நீண்ட தூர பயண அலைச்சல் காரணமாக 31—10—1987 அன்றிரவு 9-50 மணிக்கு இறந்தார். பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய மூவரும் நலமடைந்து வருகின்றனர்.

4. இது சம்பந்தமாக 31—10—1987 வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நால்வர் 7—11—1987 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 1976-இன் பிரிவு 10-இன்படி கொத்தடிமைகளை வைத்திருப்போர் மீது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்படி, மத்தியப் பிரதேசம் மாநிலம், ரேவா/சத்னா மாவட்ட ஆட்சியாளர், தனது எல்லைக்குட்பட்ட இடத்தில், கொத்தடிமை முறை நடைமுறையில் இல்லாதவாறு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தற்பொழுது தமிழ் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் மத்தியப்பிரதேச

மாநிலத்தில் கொத்தடிமைகளாக வைக்கப்படவில்லை. எனவே, கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின் அடிப்படையில் விடுப்புச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இது ஒரு மோசடி வழக்கு என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை பற்றியும் மற்ற சில விஷயங்களைப் பற்றியும்தான் தந்திருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும், இறந்துபோனவருடைய குடும்பத்திற்கும், அரசு மூலமாக அல்லது முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறந்துபோனவருடைய பிரேத பரிசோதனை அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதன் பிறகு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், உண்மையிலேயே இது ஒரு கடத்தப்பட்ட நிகழ்ச்சியில்லையென்றும், கொத்தடிமைகளாக அவர்கள் கடத்தப்படவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதை ஒரு ஃபோர்ஜரி-யான நிகழ்ச்சியென்றுகூட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களையெல்லாம் பெற்ற பிறகுதான், அந்தக் குடும்பங்களுக்கு எப்படி உதவி அளிக்கப்படவேண்டுமென்பது பற்றி அரசு ஆவன செய்யும்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கை ஒரு பக்கம் உண்மையாக இருந்தாலும், நிச்சயமாக அந்தக் குடும்பங்களிடம் அதிகக் கூலி தருவதாகச் சொல்லி ஏமாற்றி அழைத்துக்கொண்டு போய் அவர்கள் ஏமாற்றப்பட்டிருந்தாலும், தொழிலாளர்களின் பட்டினிச் சாவு நமது மாநிலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அவர்கள் அந்த மாநிலத்திற்குச் சென்று, பட்டினியாலும் பசியாலும் வாடி, நோய்வாய்ப்பட்டு இறந்தது உண்மைதான்.

1987 நவம்பர் 17] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

ஆகவே, இறந்தவரின் குடும்பத்திற்கு இந்த அரசு அனுதாபத்தோடு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டவர்களில் இன்னும் பலபேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். அவர்களும் உடனடியாக வேலைக்குச் சென்று வேலைசெய்ய முடியாதபடி உடல்நிலை கோளாறாக இருக்கின்ற காரணத்தால், அரசு அவர்களுக்கு உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் 'பாண்டட் லேபர்'' ஆக இருப்பார்களேயானால் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பை மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடத்திலும், அந்த மாவட்ட ரெவின்யூ ஆபீசர் இடத்திலும் ஒப்படைத்து இருக்கிறோம். அவர்கள் அதன்பேரில் நடவடிக்கை எடுத்து, அவர்கள் தருக்கின்ற விவரத்தை வைத்து, உண்மையிலேயே அவர்கள் கடத்தப்பட்டதாக இருக்குமானால், அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற அறிக்கையின்மீது, அரசு நடவடிக்கை எடுக்கும்.

(நண்பகல் 12-00)

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளைக் குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

"(அ) 1972-73 முதல் 1975-76 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1985-86) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல்நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை;

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின்